19.05.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மதுரையை சுற்றி தொடருது மழை

மதுரை, :மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்றும் கனமழை கொட்டி தீர்த்தது.மேலூர் பகுதி புலிப்பட்டியில் நேற்று முன்தினம் அதிகபட்சமாக 76.4 மி.மீ., மழை பதிவாகியது. தனியாமங்கலம்-56, சிட்டம்பட்டி- 39.4, வீரபாண்டி -42, மருதாநதி- 35, மஞ்சளாறு- 35, மதுரை- 34 என பதிவானது.அணைகளின் நேற்றைய நீர்மட்டம்: பெரியாறு- 116.70 அடி, வைகை- 43.54, சாத்தையாறு-12.90, மஞ்சளாறு- 49, மருதாநதி-53.25, சோத்துப்பாறை-126.28,விரகனுார்-0.70.

## நாட்டுக் கோழி வளர்ப்பு பயிற்சி

திருத்தணி: நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, மூன்று நாட்கள் பயிற்சி, நேற்று துவங்கியது. திருத்தணி, கால்நடை உதவி இயக்குனர் அலுவலகத்தில், 2014 - -15ம் ஆண்டு, நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்ட, 60 பயனாளிகளுக்கு, மூன்று நாட்கள் பயிற்சி, உதவி இயக்குனர் மருத்துவர் செல்லத்துரை தலைமையில், நேற்று துவங்கியது.

இவர்களுக்கு, 1.30 லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில், 25 சதவீதம் மாநில அரசு மானியமும், 25 சதவீதம் நபார்டு வங்கி மானியமும் என, மொத்தம் 50 சதவீதம் மானியம், 50 சதவீதம் வங்கி

கடன் வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட, பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு, நோய் தடுப்பு முறை, கோழி விற்பனை மற்றும் கோழிகளை முழுமையாக பராமரிப்பது குறித்து, மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. நேற்று, முதல் நாள் பயிற்சியில், சென்னை, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் வசந்தி பயிற்சி அளித்தார். இன்று, இரண்டாம் நாள் பயிற்சியும், நாளை, கோழிப் பண்ணைகளுக்கு பயனாளிகளை நேரில் அழைத்து சென்று, பார்வையிட்டு, கோழிகள் குறித்து விளக்கம் அளித்தல் போன்றவை நடக்கின்றன.

## சின்னசேலம் கமிட்டிக்கு மக்கா சோளம் வரத்து

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம், எள் விற்பனைக்கு வந்தது. சின்னசேலம் மார்க்கட் கமிட்டிக்கு நேற்று, 85 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்ச விலையாக 1,289 ரூபாய், குறைந்தபட்சமாக 1,213 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது. எள் 5 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக 4,633 ரூபாய், குறைந்தபட்சமாக 3,730 ரூபாய் என விலை நிர்ணயிக்கப் பட்டது. கடந்த வாரம் 240 மக்காசோளம் மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. இவை 2 லட்சத்து 96 ஆயிரத்து 850 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதேபோல் 60 எள் மூட்டைகள், 1 லட்சத்து 95 ஆயிரத்து 400 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

## தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரத்து துவங்கியது

திருக்கோவிலூர்: தொடர் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. இதனால் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும் நிலை உருவாகியுள்ளது.

கடும் வறட்சி காரணமாக தென்பெண்ணை ஆற்றில் கூட்டு குடிநீர் திட்டத்திற்காக போடப்பட்ட திறந்தவெளி கிணறுகளில் தண்ணீர்

வற்றியது. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால், விழுப்புரம் மாவட்டத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் உருவானது. நிலைமையை சமாளிக்க தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை, கடந்த மாதம் 10 நாட்களுக்கு முன், திறக்கப்பட்டது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரத்து இருந்தது. கடும் வறட்சி காரணமாக அணை மூடப்பட்டவுடன், தண்ணீர் வரத்து முற்றிலுமாக நின்று போனது. கடந்த சில நாட்களாக தென்பெண்ணையின் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது. திருக்கோவிலூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் நேற்று முன்தினம், இரண்டு மணி நேரம் நீடித்த பலத்த மழையால், தென்பெண்ணையில் தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. சாத்தனூர் அணை திறக்கப்பட்டதால், தென்பெண்ணை நதியை ஒட்டியுள்ள பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. தற்போது பெய்துவரும் தொடர் மழை, நிலத்தடி நீர்மட்டத்தை மேலும் உயர்த்தியுள்ளது. இதனால் கோடையில் குடிநீர் தட்டுப்பாடு பிரச்னை அதிகளவில் ஏற்பட வாய்ப்பில்லை. தற்போது பெய்துவரும் கோடை மழையால் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.

**ஏற்காட்டில் கொட்டி தீர்த்த மழை**

சேலம் : சேலம் மாவட்டம் ஏற்காட்டில், நேற்று முன்தினம் மழை கொட்டி தீர்த்தது. சேலம் மாவட்டத்தில், கடந்த இரண்டு வாரமாக கோடை மழை பெய்து, கோடையின் தாக்கத்தை குறைத்துள்ளது. மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.நேற்று முன்தினம் சேலத்தில், 12.5 மி.மீ., மழை பெய்தது. ஏற்காட்டில் 68.8 மி.மீ., வாழப்பாடியில் 4, ஆத்தூரில் 6.4, தம்மம்பட்டியில் 10.2, கெங்கவல்லியில் 3.4, இடைப்பாடியில் 4.2, ஓமலூரில் 38.6, மேட்டூரில் 27.8 மி.மீ., மழை பதிவானது.

**காவிரி கிழக்கு கரை வாய்க்காலில் தடுப்பணை அமையுமா? ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய எதிர்பார்ப்பு**

பள்ளிபாளையம் : "மழை காலங்களில், கிழக்கு கரை வாய்க்காலில் தண்ணீர் வெளியேறி, காவிரி ஆற்றில் கலந்து வீணாவதை தவிர்க்கும் வகையில், தட்டுப்பணை கட்டி தண்ணீர் சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக திறந்துவிடப்படும் தண்ணீர், கிழக்கு கரை வாய்க்கால் மூலம், பள்ளிபாளையம் பகுதியில், 10 கி.மீ., சுற்றளவுக்கு பாசன வசதி பெறுகிறது. ஆண்டுக்கு நான்கு மாதம், மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.அவற்றை பயன்படுத்தி, பள்ளிபாளையம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். அதன் பின், எவ்வித சாகுபடியும் செய்யமு டியாது. மழை காலத்தில் பெய்யும் மழைநீர், வாய்க்கால் வழியாக சென்று. காவிரி ஆற்றில் கலந்து வீணாகி வருகிறது.அவ்வாறு வெளியேறி வீணாகும் தண்ணீரை சேமித்து வைத்து, விவசாயத்துக்கு பயன்படுத்தும் வகையில், மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலில் தடுப்பணை கட்டவேண்டும் என்பது அப்பகுதி விவசாயிகள், பல ஆண்டு கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால், விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இது குறித்து அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது: பள்ளிபாளையம் பகுதியில், மேட்டூர் கிழக்கு கரை வாய்க்கால் நீரை பயன்படுத்தி, 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இங்கு, ஆண்டுக்கு நான்கு மாதம் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற காலங்களில், விளை நிலங்கள் சும்மா போடப்படுகிறது. மழை காலங்களில் கால்வாயில் சென்று காவிரி ஆற்றில் கலந்து வீணாகும் தண்ணீரை சேமித்தால்,

நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன், கிணறுகளில் தண்ணீர் மட்டும் அதிகரித்து, இப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்கப்படும். அவற்றை பயன்படுத்தி, ஆண்டு முழுவதும் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பாக அமையும்.விவசாயிகளும், எவ்வித சிரமின்றி வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியும். பள்ளிபாளையம் வட்டாரத்தில், மேட்டூர் கிழக்கு கரை வாய்க்காலில் குறிப்பிட்ட, ஐந்து இடங்களில், தடுப்ணை கட்டி, காவிரியில் கலந்து வீணாகும் தண்ணீரை சேமித்து வைக்க, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, தெரிவித்தனர்.

## தர்மபுரியில் 68 மி.மீ., மழை பதிவு மானாவரி விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், 68 மி.மீ., மழை பதிவானதால், மானாவரி பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், தொடர்ந்து கோடை மழை பெய்து வருவதால், ஏரி, குளம் மற்றும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. குறிப்பாக, கடந்த, ஒரு வாரமாக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தக்காளி, வெற்றிலை உள்ளிட்ட வேளாண் பயிர்கள் பாதிக்கப்பட்டாலும், வறட்சியில் வாடிய கரும்பு, மரவள்ளி கிழங்கு, மா, பருத்தி உள்ளிட்ட பயிர்களுக்கு, பாசன வசதி கிடைத்துள்ளது. இதனால், இவற்றை சாகுபடி செய்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக, தர்மபுரி மற்றும் கலெக்டர் அலுவலகத்தில், 68 மி.மீ., மழை பதிவானது. அதேபோல், மாரண்டஹள்ளியில், 57 மி.மீ., ஒகேனக்கல்லில், 54 மி.மீ., பென்னாகரத்தில், 45 மி.மீ., பாலக்கோட்டில், 32.10 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டியில், 28.30 மி.மீ., அரூர், 11.30 மி.மீ.,

மழை பதிவானது. நேற்று காலை முதல், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால், வெயிலின் தாக்கம் குறைந்து இருந்தது.

**தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி; கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த, இரண்டு நாட்களுக்கு முன், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, ஓசூர், சூளகிரி உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. இதனால், சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி நகரில் தாழ்வாக உள்ள குடியிருப்பு பகுதிகளில், மழை நீர் புகுந்தது. இதேபோல், வேப்பனப்பள்ளி பகுதியில், கனமழையால் வீடுகளில் தண்ணீர் புகுந்ததால், மக்கள் கடும் சிரமமத்திற்கு ஆளானார்கள்.

இந்நிலையில்,நேற்று முன்தினமும் தொடர்ந்து, இரண்டாவது நாளாக கிருஷ்ணகிரி, சூளகிரி, ஓசூர் உள்ளிட்ட பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் குளிர்ந்த சீதோஷ்ணநிலை காணப்பட்டது. தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக, போச்சம்பள்ளியில், 92.2 மி.மீ., பாரூர், 88.6 மி.மீ, நெடுங்கல், 63.2 மி.மீ., பெனுகொண்டாபுரம், 57.4 மி.மீ., சூளகிரி, 48 மி.மீ., தேன்கனிக்கோட்டை, 46 மி.மீ., கிருஷ்ணகிரி, 31.6 மி.மீ., ஓசூர், 30 மி.மீ., ராயக்கோட்டை, 27 மி.மீ., தளி, 20 மி.மீ., ஊத்தங்கரை, 14 மி.மீ., அஞ்செட்டி, 10.2 மி.மீ., மழையளவு பதிவானது.

## விளை பொருட்கள் சந்தை; விவசாயிகளுக்கு பாதை

கூடலூர் : கூடலூர் அத்திபாளி, பாடந்துறை பகுதி விவசாயிகளுக்கு, 'விவசாய விளை பொருட்களை தரம் பிரித்து சந்தைப்படுத்துதல்' பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் ரமேஷ் வரவேற்றார். விவசாய விளை பொருட்களை வணிக முறையில் தரம் பிரித்து விற்பனை செய்வது, குழுவாக விவசாயம் செய்வதால் கிடைக்கும் பயன், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், விவசாய விளைப் பொருட்களிலிருந்து மாற்று பொருட்களை உற்பத்தி செய்து பயன்பெறுவது குறித்து விளக்கப்பட்டது. வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறை துணை இயக்குனர் வீரமணி, வேளாண்மை உதவி அலுவலர் லட்சுமணன், பாம்-2 அறக்கட்டளை ஊழியர்கள் ஆரோக்கியராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். விவசாய குழு தலைவர் சாமுலேசன் நன்றி கூறினார்.

## தயக்கம் ! விதை நெல் விற்பனை செய்ய விவசாயத்துறை... அணை நீர்மட்டம் உயர்வால் சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்

உத்தமபாளையம்: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் திருப்திகரமாக இருப்பதால், விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு தயாராகி வருகின்றனர். ஆனால் விவசாயத்துறை விதை நெல் வழங்க தயக்கம் காட்டி வருகிறது. முல்லைப் பெரியாறு அணை பாசனத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் இருபோக நெல் சாகுபடி நடக்கிறது. கூடலூர் முதல் பழநிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்வது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக முதல் போக சாகுபடிக்கு சிக்கல் ஏற்பட்டது. காரணம் முதல் போக நெல் சாகுபடிக்கு நாற்று வளர்க்க ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக போதிய நீர் மட்டம் இல்லாததால், தண்ணீர் ஜூன் முதல் தேதி திறக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த ஆண்டு எந்த ஆண்டும் இல்லாத வகையில் கோடையில் நல்ல மழை

பெய்து வருகிறது. எனவே அணையின் நீர் மட்டம் 115 அடியை தாண்டி வருகிறது. தொடர்ந்து மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்படுகிறது. எனவே ஜூன் முதல் தேதி தண்ணீர் திறக்கப்படுவது உறுதியாகிவிட்டது. கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் முதல் போக சாகுபடிக்கான பணிகளை துவக்கியுள்ளனர். முதற்கட்டமாக விதை நெல் கொள்முதல் செய்யும் பணியில் இறங்கியுள்ளனர். இதற்கென தனியார் கடைகளில் வீரிய ஒட்டு ரகங்களை வாங்கி வருகின்றனர். முதல் போகத்திற்கு விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குவதற்கான அறிகுறிகளே இல்லாமல் உத்தமபாளையம் மற்றும் கம்பம் உதவி இயக்குனர் அலுவலகங்கள் அமைதியாக உள்ளன. விவசாயிகள் கூறியதாவது: விவசாயத்துறையில் விதை நெல் விற்பனையை நிறுத்திவிட்டது. எனவே தனியார் கடைகளில் கோக்நாத் 509 என்ற வீரிய ஒட்டு ரக நெல் கொள்முதலில் விவசாயிகள் இறங்கியுள்ளனர், என்றனர். வீரிய ஒட்டு ரகம் விவசாயிகளுக்கு வழங்க விவசாயத்துறை முன்வர வேண்டும். விவசாயத்துறை அதிகாரிகள் கூறுகையில், ""வீரிய ஒட்டுரகம் தருவதற்கு அரசு அனுமதியில்லை. விவசாயிகள் வீரிய ரக விதைகளை தான் விரும்புகின்றனர். இதனால் நெல் விதை வினியோகிப்பதில்லை," என்றனர்.

## சோத்துப்பாறையில் 24 மி.மீ., மழை அணைகளின் நீர்மட்டம் உயர்வு

தேனி: தேனி மாவட்டத்தில் கோடை மழை தொடர் மழையாக பெய்துவருகிறது. நீர்நிலைகளில் மழை நீர் தேங்கி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சோத்துப்பாறையில் 24 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. ஆண்டிபட்டி-6.8, அரண்மனைபுதூர் 4.2., போடி-4.2, கூடலூர்- 6, மஞ்சளாறு- 28, பெரியகுளம்- 20, பெரியாறு-8.4, சோத்துப்பாறை-24, தேக்கடி-5.5, உத்தமபாளையம் -12, வைகை - 9.2 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அணைகளின் நிலவரம்: வைகை

அணையின் நீர்மட்டம் 43.54 அடியாக உள்ளது (மொத்தம் 71). வினாடிக்கு 980 கன அடி நீர் வரத்து உள்ளது. 60 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பெரியாறு அணையின் நீர்மட்டம் 116.70 அடியாக உள்ளது. வினாடிக்கு 566 கன அடி நீர் வரத்து உள்ளது. 150 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மஞ்சளாறு அணை 49 அடியாக உள்ளது(மொத்தம்-57). வினாடிக்கு 354 கனஅடி நீர் வரத்து உள்ளது. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது (மொத்தம் - 126.28) வினாடிக்கு 150 கன அடி நீர் வரத்து உள்ளது. 150 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. சண்முகாநதி அணை 26.25 அடியாக உள்ளது(மொத்தம் 51).

**மானாவாரி நிலக்கடலை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி**

தேவாரம்: தேவாரம் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் மானாவாரி நிலக்கடலை நல்ல மகசூல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம், தம்மிநாயக்கன்பட்டி பகுதிகளில் 4 ஆயிரம் ஏக்கரில் சித்திரை பட்ட மானாவாரி நிலக்கடலை பயிரிடப்பட்டது. சில பகுதியில் பயிரிட்டு ஒரு மாதம் கடந்துள்ளது. இந்த பகுதியில் உள்ள செடிகள் பூ பூக்கும் பருவம் அடைந்துள்ளன. தற்போது தேவாரம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைக்கும் என்று மானாவாரி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். டி.மீனாட்சிபுரம் விவசாயி ஆண்டவர் கூறியதாவது: கோடை மழை ஓரளவு பெய்யும் என்ற நம்பிக்கையில் பங்குனி கடைசியில் மானாவாரியாக நிலக்கடலை பயிரிட்டோம். சில பகுதிகளில் தற்போது நடவு பணி நடக்கிறது. இரண்டு பருவத்தில் பயிரிட்ட நிலக்கடலைக்கும் இந்த மழை நல்ல பலனளிக்கும். இந்த ஆண்டு நிலக்கடலை பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## மாவட்டத்தில் கொட்டிய கோடை மழை விவசாயிகள் மகிழ்ச்சி

சிவகங்கை: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. அதிக பட்சமாக திருப்புத்தூரில் பெய்துள்ளது. அக்னி நட்சத்திரம் மே 5ம் தேதி துவங்கியது. வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்ற அச்சத்தில் இருந்த மக்களுக்கு ஆறுதல் தரும் வகையில், பரவலாக அனைத்து பகுதிகளிலும் கோடை மழை பெய்து வருகிறது. 6ம் தேதியில் இருந்து சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து தாலுகாவிலும் கோடை மழை பெய்து வருகிறது. கோடை மழையால் விவசாயிகள் ஆர்வத்துடன் கோடை உழவு முடித்து நெல்,தானிய பயிர் நடவு பணிகளில் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மழை அளவு

காரைக்குடி -12.4 மி.மீ.,

மானாமதுரை - 2.2.

திருப்புவனம் - 6.2

திருப்புத்தூர் - 57

இளையான்குடி - 18

தேவகோட்டை - 2

சிவகங்கை - 16

## குமரி மாவட்டத்தில் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்தது. நாகர்கோவில், கன்னிமார், சுருளோடு, குளச்சல் பகுதியில் நேற்று மாலை இடைவிடாது பலத்த மழை கொட்டியது. பூதப்பாண்டி, ஆரல்வாய்மொழி, மயிலாடி, கொட்டாரம், முள்ளாங்கினாவிளை, புத்தன்அணை பகுதிகளிலும் மழை பெய்தது. கன்னிமாரில் அதிகபட்சமாக 13 செ.மீ,. மழை பதிவானது. திற்பரப்பு

அருவி பகுதியில் கனமழை கொட்டியதையடுத்து அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் 2-வது நாளாக அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் ஏழகரம், ராமர்காலணி, டிஸ்லரி ரோட்டில் உள்ள குடியிருப்புகள், காந்தி காலணி, எம்.ஜி.ஆர். நகர், பறக்கின்கால், ஆசிரமம், சுசீந்திரம் ஆசாத் நகர் பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்தது.சுசீந்திரம் பழையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் வடக்கு தாமரைகுளம் பகுதியில் உள்ள தென்னந்தோப்புகள், வயல்களில் வெள்ளம் புகுந்தது. குழித்துறை ஆறு, வள்ளியாறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை பகுதியில் மழை நீடித்து வருகிறது. இதனால் அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் இரண்டு அடியும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் மூன்று அடியும், சிற்றார் அணைகளின் நீர்மட்டம் ஒரு அடியும் உயர்ந்துள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 37.20 , பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 66.70 அடியை எட்டியது.

சிற்றார் அணை நிரம்பி வருவதையடுத்து இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. குழித்துறை ஆற்றின் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பொதுப்பணித்துறையினர் அறிவித்துள்ளனர்.சாமிதோப்பு, பால்குளம் பகுதிகளில் உள்ள உப்பளங்களில் மழைநீர் குளம்போல் தேங்கி உள்ளது. இதனால் உப்பு உற்பத்தி பாதிக் கப்பட்டுள்ளது. தோவாளை, செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி பகுதிகளில் செங்கல் உற்பத்தியும் முடங்கி உள்ளது.குலசேகரம், கீரிப்பாறை, அருமனை பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் ரப்பர் பால்உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- பேச்சிப்பாறை-101.4, பெருஞ்சாணி- 97.8, சிற்றார்1-

120.4, சிற்றாா்2-110, பூதப்பாண்டி-67.2, சுரு ளோடு-102.6, கன்னிமாா்-130, ஆரல்வாய்மொழி-60.6, பாலமோா்-72.2, மயி லாடி-46.2, கொட்டாரம்-29.4, இரணியல்-82, ஆணைக் கிடங்கு-61, குளச்சல்-106.4, குருந்தன்கோடு-18, அடையாமடை-48, கோழிப்போா்விளை-32, முள்ளங்கினாவிளை-88, புத்தன்அணை-96.2, நாகா்கோவில்-94.6.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சீசன் தொடங்கியும் வரத்து குறைவால் மாம்பழ விலை அதிகரிப்பு**



வேலூா் மாவட்டத்தில் மாம்பழ சீசன் மாா்ச் இறுதியில் தொடங்கியபோதிலும், வரத்து குறைவு காரணமாக அவற்றின் விலை அதிகரித்துள்ளது. வேலூா் மாவட்டத்தில் விளையும் சில மாம்பழ வகைகளின் வரத்து இன்னமும் தொடங்கவில்லை. கடந்த ஆண்டில் இதே நேரத்தில் வந்த வரத்தைக் காட்டிலும், 70 சதவீதம் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் சரிவர மழை பெய்யாமல் போனதுதான். இந்த நிலையில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கோடை மழை

காரணமாக மாம்பழ விளைச்சல் அமோகமாக இருக்கும். அதன் காரணமாக இன்னும் இரு வாரங்களில் மாம்பழ வரத்து அதிகரிக்கும் என 40 ஆண்டுகளாக மாம்பழ மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ள வி.குமார் கூறுகிறார். தற்போது ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாம்பழ வரத்து உள்ளது. காலாப்பாடு, பங்கனப்பல்லி, செந்தூரா, இமாம்பசந்த், அதிமதுரம் உள்ளிட்டவற்றின் வரத்து கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகிறது. இருப்பினும் அவற்றின் தரம் சொல்லும்படியாக இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர். மாம்பழங்களில் அதிக சுவையுள்ள இமாம்பசந்த் தற்போது கிலோ ரூ.130 வரை விற்பனை செய்யப்படுகிறது. காலாப்பாடு பழங்கள் கிலோ ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

வழக்கமாக வேலூர் நகரில் அல்போன்சா பழங்கள் அதிக அளவில் பொதுமக்கள் விரும்பி வாங்கிச் செல்லும் பழங்களில் ஒன்று. இதன் வரத்தும் தற்போது குறைந்துள்ளது. பெரும்பாலும் அல்போன்சா, பெங்களூரா பழ வகைகள் ஆந்திர மாநிலம் சித்தூரில் உள்ள மாம்பழத் தொழிற்சாலைகளுக்கு டன் கணக்கில் ஏற்றிச் செல்வதும் இதற்குக் காரணம். செந்தூரா, பங்கனப்பல்லி பழங்களை நடுத்தர மக்கள் வாங்கிச் செல்கின்றனர் என மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சுப்பிரமணி, மகேஷ் ஆகியோர் கூறுகின்றனர். நன்கு கழுவ வேண்டும்

தற்போது விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படும் பழங்கள் விரைவாகப் பழுக்க கார்பைட் கல் பயன்படுத்தப்படுகிறது. இவை மாம்பழத்தின் தோல் மீது படிவதற்கு வாய்ப்பு உள்ளது. இருந்தாலும் இதை விட ஆபத்தானதாக தற்போது ரசாயனம் கலந்த ஸ்பிரே பயன்படுத்தப்படுகிறது. இந்த ஸ்பிரேயை பயன்படுத்தி பழுக்க வைத்த பழங்களில் ஆங்காங்கே சிவப்புத் திட்டுகள் காணப்படும்.

எந்த வகையில் பழுக்க வைத்தாலும், ரசாயனம் மேல்தோலை தாண்டி பழத்துக்குள் செல்லாது. மேல்தோளில் மட்டுமே படியும்.

எனவே பொதுமக்கள் மாம்பழங்களை சாப்பிடும் முன் நன்றாகக் கழுவி,

அதை தண்ணீரில் சுமார் ஒரு மணி நேரம் போட்டு வைப்பதன் மூலம் ரசாயனத்தால் ஏற்படும் உடல்நல பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என நீண்டகாலமாக பழ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

**மே 22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 22-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் வி.கே. சண்முகம் தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று மனுக்களை அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**வத்தலகுண்டில் வேளாண் இயக்குநர் ஆய்வு**

மாநில வேளாண் உற்பத்தி இயக்குநர் ராஜேஸ் லக்கானி சனிக்கிழமை ஆடுசாபட்டியில் ஆய்வு மேற்கொண்டார். அப்பகுதி விவசாயிகளிடம், விவசாயம் தொடர்பான தொழில்நுட்பங்களையும், சந்தேகங்களையும் வேளாண் அலுவலகத்தை நாடி நிவர்த்தி செய்து, விவசாயத்தில் நல்ல பலன் அடையுமாறு ஆலோசனைக் கூறினார். ஆய்வின்போது, திண்டுக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார், வத்தலகுண்டு வேளாண் உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சு விலை உயர்வு**

வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சின் விலை உச்சத்தை எட்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் இலவம் விவசாயம் நடைபெற்று வருகிறது. இவை குறைந்த அளவு தண்ணீரில் வறண்ட பகுதியிலும் செழித்து வளருவதால்

கடமலைக்குண்டு, வருசநாடு, மயிலாடும்பாறை, முருக்கோடை உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் இலவம் மரங்கள் நடப்பட்டுள்ளன. இலவம் மரங்களில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூ பூத்து அதன் பின் பிஞ்சுகள் வளர்ந்து மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை இலவம் பஞ்சு பறிப்புக்கு தயாராகி விடும். மரங்களில் இருந்து பறிக்கப்படும் இலவம் காய்களை காயவைத்து இலவம் பஞ்சு தனியாக பிரித்து எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இலவம் மரங்களுக்கு பூச்சி மருந்து அடிப்பது உள்ளிட்ட எந்தவிதமான பராமரிப்பு செலவுகளும் கிடையாது. கடந்த ஆண்டு இலவம் பஞ்சு கிலோ ரூ.30 முதல் 36 வரை விற்பனையானது. ஆனால் இந்த ஆண்டு பூக்கும் பருவத்தில் தொடர் மழை பெய்ததால் பூக்கள் உதிர்ந்து காய்ப்பும் குறைந்து 75 சதவீதம் மகசூல் பாதிக்கப்பட்டது. இதனால் இலவம் பஞ்சு வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு எப்போதும் இல்லாத வகையில் இலவம் பஞ்சு கிலோ ரூ.105முதல் ரூ.110 வரை விற்பனையாகிறது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து வருசநாட்டை சேர்ந்த விவசாயி ராமர் கூறியது: வருசநாடு பகுதியில் கிடைக்கும் இலவம் பஞ்சை வியாபாரிகள் வாங்கி கொல்கத்தா, மும்பை போன்ற வெளி மாநிலங்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றனர். இதனால் விவசாயிகளை விட வியாபாரிகள் தான் லாபம் பார்க்கின்றனர்.

எனவே வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சு கொள்முதல் மையங்களை நிறுவி விவசாயிகளின் நலன்காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**திருப்பாச்சேத்தியில் பலத்த காற்றுடன் மழை**

திருப்பாச்சேத்தி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை மாலை பலத்த காற்றுடன் மழை பெய்தது. கடந்த சில நாட்களாக தென் தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் திருப்பாச்சேத்தியில் திங்கள்கிழமை மாலை பலத்த காற்றுடன் மழை

பெய்தது. இதனால் ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலை தூதை விலக்கு அருகே சாலை ஓரமாக நின்ற ஓரிரு மரங்கள் சாய்ந்தன.

மேலும் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையால் கோடை விவசாயமாக கரும்பு, பருத்தி, வாழை, நெல், சோளம், கம்பு ஆகியவற்றை பயிரிட்டுள்ள விவசாயிகளும், தற்போது நிலவும் ஈரப்பதத்தினால் கால்நடைகளுக்கு தேவையான புல் வளர்ந்துள்ளதால் கால்நடை வளர்ப்போரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திருப்பாச்சேத்தி, தூதை, மழவராயனேந்தல், வாகுடி உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை பெய்த போதிலும் திருப்புவனம், மணலூர், பூவந்தி ஆகிய பகுதிகளில் மிதமான மழையே பெய்தது.

**கோடை உழவின் அவசியம்: வேளாண்மை அதிகாரி யோசனை**

பரமக்குடி பகுதியில் தற்போது பெய்து வரும் கோடை மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தரிசு நிலங்களில் கோடை உழவு மேற்கொள்ள வேண்டும் என வேளாண் துணை இயக்குநர் சேகர் திங்கள்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: தற்போது பெய்து வரும் மழையால் மண்ணின் கடினத் தன்மையைப் போக்க விவசாயிகள் கோடை உழவு மேற்கொள்ள வேண்டும். இதனால் மழை நீர் மண்ணில் நிலைநிறுத்தப்படுவதுடன், மண்ணின் நீர்பிடிப்புத் திறனும் அதிகரிக்கிறது. நிலத்தில் உள்ள மண் கடினத் தன்மை நீங்கி காற்றோட்டமடைகிறது. மழையினால் மண்ணில் ஏற்படும் அரிமானம் தடுக்கப்படுவதுடன், மண் வளம் மற்றும் சத்துக்கள் பாதுகாக்கப்படுகிறது. நிலத்தில் உள்ள களைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன், புதிய களைகள் தோன்றுவதும் குறைகிறது. மண்ணில் புதையுண்டுள்ள தீமை செய்யும் பூச்சிகளின் கூண்டு புழுக்கள் உழவின்போது அழிக்கப்படுகிறது. இதனால் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைகிறது. மண் மென்மையாவதால் பயிரிடப்படும்

விதைகள் விரைவாக முளைக்கிறது. பயிரின் வேர் ஆழமாகச் சென்று வறட்சியை தாங்கி வளர உதவுகிறது. நிலத்தில் கருவேல் மரங்கள் வளர்வதும் தடுக்கப்படுகிறது. அங்கக பொருட்கள் நன்கு வளர்ச்சியடைந்து மண் வளமடைகிறது. அதிக நன்மை தரக்கூடிய கோடை உழவினை அனைத்து விவசாயிகளும் கடைப்பிடித்து பயனடைய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தருமபுரியில் தொடர்மழை: ஏரிகளுக்கு நீர் வரத்து**

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழையினால் ஏரிகளுக்கு நீர் வரத்து வந்துள்ளது.

தருமபுரி மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக பருவமழைகள் பொய்த்து விவசாயத்திற்கு போதிய நீரின்றி விவசாயிகள் தவித்து வந்தனர். இந்த நிலையில், நிகழாண்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் வெயிலின் தாக்கம் அதிக அளவு இருந்தது. குறிப்பாக, ஏப்ரல் மாதத்தில் சில நாள்களில் வெயில் சதம் அடித்தது. இதனால், பகல் நேரங்களில் வீட்டை விட்டு வெளியில் வர முடியாமல் பொதுமக்கள் தவித்து வந்தனர். இந்த நிலையில், நிகழாண்டு கோடை காலத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கியதும் மேலும் வெயில் அளவு அதிகரிக்கும் என பொதுமக்கள் அச்சப்பட்டிருந்தனர்.

ஆனால், வழக்கத்துக்கு மாறாக கத்திரி வெயில் தொடங்கியது முதல் அவ்வப்போது லேசான மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது.

குறிப்பாக, கடந்த சில நாள்களாக பகல் நேரங்களில் வெயிலும், மாலை முதல் இரவு நேரங்களில் கோடை மழை இடி, மின்னலுடன் கொட்டித் தீர்த்தது. மேலும், தற்போதும் விட்டு, விட்டு பரவலாக மழை பொழிந்து வருகிறது. மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வருகிற மழையால் முக்கிய ஏரிகளான ராமக்காள் ஏரி, அன்னசாகரம் ஏரி, அதியமான்கோட்டை ஏரி, இலளிகம் ஏரி, மாதேமங்கலம் ஏரி, உள்ளிட்ட முக்கிய ஏரிகளுக்கு தண்ணீர் வந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில், 74

ஏரிகளுக்கு சுமார் 50 சதத்திற்கு மேல் நீர் வரத்து உள்ளதாக பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதே போல, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளுக்கும் ஓரளவிற்கு தண்ணீர் வந்துள்ளது. இது தவிர, மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளில் நீர் மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. மேலும், கடந்த மூன்று நாள்கள் பெய்த மழையில் பெரும்பாலான விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. தருமபுரி அருகே வத்தல்மலையில் பெய்த கனமழையால் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு மலைப்பகுதிக்கு செல்லும் சாலைகள், தடுப்புச் சுவர் அடித்துச் செல்லப்பட்டது. தருமபுரி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் கோடைமழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து, விவசாயி தண்டபாணி கூறியது: தருமபுரி மாவட்டத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு மே மாதங்களில் வெள்ளம் ஏற்படும் கோடை மழை பெய்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் ஓரளவுக்கு உயர்ந்து வருகிறது. ஏரி மற்றும் நீர் நிலைகளுக்கு மழைநீர் வரும் கால்வாய்களை அளவீடு செய்து தூர்வாரினால் மேலும் வெள்ளநீர் வீணாகாமல் சேகரித்து விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும் என்றார்.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர்கள் பாதிப்பு குறித்து ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் பயிர்கள் பாதிப்பு குறித்து மாவட்ட நிர்வாகம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

மாவட்டத்தில் கோடை நெல், சித்திரைப் பட்ட உளுந்து, பச்சைப் பயறு, பருத்தி, எள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஒரு வார காலமாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் இதுவரை சராசரியாக 177.93 மி.மீ. மழையளவு பதிவாகியுள்ளது. இது, கடந்த ஆண்டை விட 63.51 மி.மீ. கூடுதல்.

மாவட்டத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு நிகழாண்டு இயல்பான அளவை விட இரு மடங்குக் கூடுதலாக கோடை நெற்பயிர் பயிரிடப்பட்டது. இதில், 50 சதப் பரப்பளவில் அறுவடை முடிவடைந்துவிட்டது. தாமதமாகச் சாகுபடியைத் தொடங்கியவர்களுக்கு இப்போது அறுவடை செய்ய வேண்டிய நிலையில் பயிர்கள் உள்ளன. இந்நிலையில், மே 16ஆம் தேதி தொடர்ந்து ஏறத்தாழ 7 மணிநேரம் பெய்த மழையால் பல இடங்களில் பயிர்கள் சாய்ந்துவிட்டன. இதனால், மகசூல் இழப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர்.

மாவட்டத்தில் ஏறத்தாழ 4,500 ஹெக்டேரில் பயறு வகைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் 400 ஹெக்டேரில் தண்ணீரில் மூழ்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதேபோல எள் பயிர்களும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இதுதொடர்பாக ஆய்வு மேற்கொள்ளுமாறு வருவாய் துறையினருக்கு ஆட்சியர் ஆணையிட்டுள்ளார். இதைத்தொடர்ந்து, பயிர்கள் பாதிப்பு குறித்து வருவாய் துறையினர், வேளாண் துறையினர் ஆய்வும், கணக்கெடுப்பும் செய்து வருகின்றனர் என மாவட்ட நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

**தொடர் மழையின் காரணமாக தக்காளி விலை அதிகரிப்பு**



கிணத்துக்கடவு,

தொடர் மழையின் காரணமாக கிணத்துக்கடவு காய்கறி சந்தையில் தக்காளி விலை அதிகரித்துள்ளது.

தக்காளி விளைச்சல் பாதிப்பு

கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இதில் விவசாயிகள் பலர் தக்காளி சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளி தினமும் கிணத்துக்கடவு தினசரி காய்கறி சந்தைக்கு விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இங்கு பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் மூலம் தக்காளியை வாங்கி செல்கிறார்கள். இந்த மாதம் தொடக்கத்தில் 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.250-க்கு விற்பனையானது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக தக்காளி விளைச்சல் கடுமையாக

பாதிக்கப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பு

கிணத்துக்கடவு சந்தைக்கு தினமும் 500 பெட்டிகளுக்கு மேல் தக்காளி விற்பனைக்கு வரும். ஆனால் நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 200 பெட்டி தக்காளி விற்பனைக்கு வந்தது. 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.360-க்கு விற்பனையானது. இந்த விலை அதிகரிப்பு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், விளைச்சல் குறைவு அவர்களுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது. சில்லறை விலை கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.28 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**மாம்பழத்துறையாறு அணையில் இருந்து 62 கன அடி தண்ணீர் வெளியேற்றம்**



கனமழையின் காரணமாக மாம்பழத்துறையாறு அணை நிரம்பியது. இதன் பின்னரும் தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் 62 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. கனமழை : குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகவே கோடை மழை பெய்து வந்தது. இதற்கிடையே லட்சத்தீவு மற்றும் கேரளா பகுதியில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டிருந்ததை

தொடர்ந்து குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்தது. நேற்று முன்தினமும் இடி–மின்னல் மற்றும் சூறைக்காற்றுடன் கனமழை கொட்டியது. இதனால் நாகர்கோவில் நகரில் உள்ள அனைத்து சாலைகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்குள் வெள்ள நீர் புகுந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது.

62 கன அடி தண்ணீர் வெளியேற்றம்

இந்த மழையின் காரணமாக குமரி மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகமாக இருந்தது. இந்த நிலையில் மாம்பழத்துறையாறு அணைக்கு முளம்சல்லி என்ற நீர்வீழ்ச்சியில் இருந்து தண்ணீர் அதிகமாக வந்து கொண்டிருந்தது. இதனால் மாம்பழத்துறையாறு அணை நீர் மட்டம் அதன் முழு அளவான 54.12 அடியை எட்டியது. இதன் பின்னரும் தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் கடந்த 3 நாட்களாக 62 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு, தக்கலை அருகே உள்ள வள்ளியாறுக்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

இதனை சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் பார்த்து மகிழ்கின்றனர். மேலும், அந்த நீர்வீழ்ச்சியில் இருந்து தண்ணீர் விழும் அழகை, மாம்பழத்துறையாறு அணையில் இருந்து அனைவரும் பார்த்து ரசிக்கின்றனர். பொதுப்பணித்துறையினர் முழுநேரமும் பணியில் இருக்கின்றனர். தண்ணீர் வரத்திற்கு ஏற்ப திறந்து விடுகின்றனர்.

**சராசரி அளவை விட 95.24 மில்லி மீட்டர் மழை அதிகம் பெய்துள்ளது**




மதுரை மாவட்டத்தில் சராசரி அளவை விட 95.24 மில்லி மீட்டர் மழை அதிகம் பெய்துள்ளது. தேவையான அளவு இடுபொருள் இருப்பு உள்ளது என்று விவசாய அதிகாரி தெரிவித்துள்ளார். கோடை உழவு மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த கோடைமழை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எள், சோளம், நெல் பயிரின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும். மழைநீரை சரிவுக்கு குறுக் காக கோடை உழவு செய்வதன் மூலம் வடிந்தோட விடாமல் தடுத்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தலாம். வழிந்து வரும் மழைநீரை விவசாயிகள் தங்கள் நிலத்தில் அமைத்துள்ள பண்ணைக் குட்டைகளில் சேமித்து நீர்பாசனத்திற்கும், கால்நடைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். மழை அதிகம் மதுரை மாவட்டத்தை பொறுத்தவரை மே மாதம் வரையிலான சராசரி மழை அளவு 178.80 மில்லி மீட்டர் ஆகும். ஆனால் தற்போது மே மாதம் 14-ந்தேதி வரை 274.01 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரி மழை அளவைவிட 95.24 மில்லி மீட்டர் அதிகம். எனவே மதுரை மாவட்ட விவசாய பெருமக்கள் தற்போது பெய்து வரும் மழைநீரை பயன்படுத்தி

குறுகியகால பயிர்களான பயறு வகைகளை சாகுபடிசெய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேவையான இடுபொருட்கள் இருப்பு உள்ளன என்று மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சாரநாத்பாபு தெரிவித்துள்ளார்.

**கோடை மழை எதிரொலி: அறந்தாங்கி மாட்டுச்சந்தையில் உழவு மாடுகள் விற்பனை மும்முரம்**



அறந்தாங்கி பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த கோடை மழையின் எதிரொலியாக அறந்தாங்கி மாட்டுச் சந்தையில் உழவு மாடுகளின் விற்பனை மும்முரமாக நடைபெற்றது. ஒரு ஜோடி மாடு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் வரை விலை போனது.டிராக்டர்கள் கடந்த சில ஆண்டுகள் முன்பு வரை வயல்களில் உழவுக்கு மாடுகளே பயன்படுத்தப்பட்டு வந்தன. மாடுகள் மூலம் உழவு செய்யும் போது, மண் நன்றாக கிளறப்பட்டதால், சாகுபடி செய்யும் பயிர்கள் அதிக மகசூல் பெற்றன. இந்நிலையில் விவசாயம் எந்திரமயமான காரணத்தால், வயல்களில் உழவு பெரும்பாலும் டிராக்டர் மூலமே நடந்து வருகிறது. இதனால் பத்து கிராமங்களில் ஒரு டிராக்டர் என்றிருந்த நிலை மாறி, ஒரு கிராமத்திற்கு பத்து டிராக்டர்கள் என்ற நிலை உருவானது.வயலுக்கு மிகப் பயன் உழவு மாடுகளின் பயன்பாடு குறைந்ததால், மாடுகளை

வளர்த்து வந்தவர்கள் தங்கள் மாடுகளை விற்பனை செய்து விட்டனர். இருப்பினும் பாரம்பரியமாக மாடுகளை கொண்டு உழவு செய்யும் விவசாயிகள் மட்டும் தொடர்ந்து உழவிற்கு மாடுகளையே பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் தற்போது பெரும்பாலான விவசாயிகள் தங்கள் வயல்களில் உழவு செய்ய மாடுகளை வாங்கி வருகின்றனர். மேலும் வயல்களில் கோடை மழையை பயன்படுத்தி புழுதி உழவு மாடுகள் மூலம் செய்வதால், கலப்பையின் கொழு அதிக ஆழத்திற்கு சென்று மண்ணை கிளறி விடுவதால், வயலின் மேல் பகுதியில் உள்ள சத்துக்கள் உள்பகுதிக்கு செல்கின்றன. மேலும் அதிக ஆழத்திற்கு உழவு செய்வதால், உழவு செய்யும்போது மேலே வரும் பெரிய பெரிய கட்டிகளில் மழை நீர் தேங்குவதாலும் வயலுக்கு மிகப் பயன்தரும். இந்நிலையில் கடந்த சில நாட்களாக அறந்தாங்கி பகுதியில் பெய்து வந்த கோடை மழையின் காரணமாக அறந்தாங்கி பகுதியில் ஏரிகளில் தண்ணீரின் அளவு அதிகரித்ததாலும், வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளதாலும், விவசாயிகள் கோடை உழவு செய்வதற்காக மாடுகளை வாங்க அறந்தாங்கி மாட்டுச் சந்தையில் குவிந்துள்ளனர். விலை உயர்வு : மாட்டுச்சந்தைக்கு மணப்பாறை, திருச்சி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் நேற்று நூற்றுக்கணக்கான ஜோடி மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இவ்வாறு விற்பனைக்கு வந்த மாடுகளை விவசாயிகள் பேரம் பேசி வாங்கி சென்றனர். சிறிய மாடுகள் ஒரு ஜோடி ரூ.35 ஆயிரம் முதல் பெரிய மாடுகள் ஒரு ஜோடி ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் வரை விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட விலை சிறிதளவு உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அறந்தாங்கி மாட்டுச் சந்தையில் உழவு மாடுகள் விற்பனை மும்முரமாக நடைபெற்றதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**போடி பகுதியில் மழை நீடிப்பு: கண்மாய்கள் நிரம்பின**



போடி பகுதியில் மழை நீடித்து வருகிறது. இந்த மழைக்கு 2 வீடுகள் இடிந்து விழுந்து சேதம் அடைந்தன. அந்த பகுதியில் உள்ள கண்மாய்கள் நிரம்பின.

<u>2 வீடுகள் சேதம்</u>

தேனி மாவட்டம் போடிப்பகுதியில் தொடந்து 15 தினங்களாக மழை பெய்து வருகிறது. இதில் போடி தாலுகா பகுதிகளான சிலமலை, சில்லமரத்துப்பட்டி, ராசிங்காபுரம், மீனாட்சிபுரம், மேலச்சொக்கநாதபுரம் உள்ளிட்ட கிராம பகுதிகளில் மழை நீடித்து வருகிறது. இந்த நிலையில் ராசிங்காபுரத்தில் ரவி என்பவரின் வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது.
இதே போல் சிலமலையில் ராமுத்தாய் என்பவரின் வீட்டு சுவரும் இடிந்து விழுந்தது. இந்த சம்பவங்களில் வீட்டில் இருந்த பொருட்கள் சேதம் அடைந்தன. அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை. இதுகுறித்து தகவலறிந்த போடி தாசில்தார் குணசேகரன் தலைமையில் வருவாய் அலுவலர்கள் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

<u>கண்மாய்களுக்கு நீர்வரத்து</u>

போடி மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்த பலத்த மழையால் கொட்டக்குடி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. கோடைகாலத்தில்

ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டு இருப்பதை ஏராளமான மக்கள் கண்டு ரசித்தனர். இந்த மழையால் போடி மரிமூர்குளம், ஒட்டுக்குளம், பங்காருசாமி கண்மாய், சங்கரப்பன் கண்மாய் ஆகியவை நிரம்பின. மீனாட்சிபுரம் கண்மாய் நிரம்பி விவசாய நிலங்களில் தண்ணீர் புகுந்தது. கண்மாய்கள் நிரம்பியதால் ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்துள்ளது.

கம்பம் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக வீரப்பநாயக்கன் குளம், ஒட்டுக்குளம், கொடம்படி குளம், மஞ்சக்குளம் மற்றும் கேசவபுரம் கண்மாய் உள்ளிட்ட 5–க்கும் மேற்பட்ட குளங்கள் மற்றும் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

**இடி-மின்னலுடன் கோடை மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில் நேற்று மாலை இடி-மின்னலுடன் கோடை மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் மே மாதம் அக்னிநட்சத்திரம் தொடங்கிய நாளில் இருந்து வெயில் கொளுத்தி வருகிறது. இந்த ஆண்டு கடந்த மாதமே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. சில நாட்களுக்கு முன்பு 96,98 டிகிரி என கொளுத்தி வந்த வெயில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய பிறகு 100 டிகிரி, 102 டிகிரி என சுட்டெரித்தது இரவு நேரத்தில் அனல் காற்று வீசியது. கடந்த 15ம் தேதி கோடை மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. நேற்றைய வெயிலின் அளவு 90 டிகிரியாக பதிவாகியுள்ளது. இந்நிலையில் திருவண்ணாமலையில் நேற்று மாலை 5 மணியளவில் தீடிரென கருமேகங்கள் திரண்டு 5.45 மணிளவில் பலத்த

இடி,மின்னல்,காற்றுடன் மழை பெய்ய தொடங்கியது. இந்த கோடை மழை சுமார் 1 மணி நேரம் நீடித்தது. இந்த மழையினால் திருவண்ணாமலையில் பல்வேறு இடங்களில் மின் தடை ஏற்பட்டது. இதேபோல நேற்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி, செய்யாறு, வந்தவாசி, தண்டராம்பட்டு, கலசபாக்கம், தானிப்பாடி போன்ற இடங்களில் மழை பெய்தது. இந்த கோடை மழையால் திருவண்ணாமலை மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில் நேற்று மாலை இடி-மின்னலுடன் கோடை மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் மே மாதம் அக்னிநட்சத்திரம் தொடங்கிய நாளில் இருந்து வெயில் கொளுத்தி வருகிறது. இந்த ஆண்டு கடந்த மாதமே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. சில நாட்களுக்கு முன்பு 96,98 டிகிரி என கொளுத்தி வந்த வெயில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய பிறகு 100 டிகிரி, 102 டிகிரி என சுட்டெரித்தது இரவு நேரத்தில் அனல் காற்று வீசியது. கடந்த 15ம் தேதி கோடை மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. நேற்றைய வெயிலின் அளவு 90 டிகிரியாக பதிவாகியுள்ளது.

இந்நிலையில் திருவண்ணாமலையில் நேற்று மாலை 5 மணியளவில் தீடிரென கருமேகங்கள் திரண்டு 5.45 மணிளவில் பலத்த இடி,மின்னல்,காற்றுடன் மழை பெய்ய தொடங்கியது. இந்த கோடை மழை சுமார் 1 மணி நேரம் நீடித்தது. இந்த மழையினால் திருவண்ணாமலையில் பல்வேறு இடங்களில் மின் தடை ஏற்பட்டது. இதேபோல நேற்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி, செய்யாறு, வந்தவாசி, தண்டராம்பட்டு, கலசபாக்கம், தானிப்பாடி போன்ற

இடங்களில் மழை பெய்தது. இந்த கோடை மழையால் திருவண்ணாமலை மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருச்சி: திருச்செந்துறை வணிக வளாகத்தில் வாழைத்தார் இன்று பொது ஏலம் நடை பெறுவதால் 11 மணிக்குள் முன்பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.' ரங்கம் தாலுகா, திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (செவ்வாய்) நடைபெற உள்ளது. ஏலத்தில் விவசாயிகளுக்கு எந்தவித கமிஷன் இல்லாமல் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும்.திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டி யம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்கலாம்.

**தொடரும் கோடை மழை தீவிர சாகுபடியில் விவசாயிகள்**

கரூர்: கரூர் மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து கொண்டிருப்பதையடுத்து சாகுபடி பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். கரூர் மாவட்டத்தில் அக்னி நட்சத்திர வெயில் கடந்த சில நாட்களாக கொளுத்தி வந்தது. கடந்த மாதம் வரை மாவட்டத்தில் 104 டிகிரி வரை வெயில் தாக்கம் இருந்தது. இந்நிலையில் திடீரென கோடைமழை கொட்டித் தீர்த்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்தது குளிர்ந்த சீதோஷ்னநிலை நிலவிவருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் நல்ல மழை பெய்தது. அதிகபட்ச அளவாக கடந்த வாரம் மழை பெய்தது. இந்த மழை காரணமாக அக்னி நட்ச்திர வெயிலின் வெப்பம் குறைந்ததுடன் கிராமங்களில் குளம், குட்டைகளில் நீர் நிரம்பி

வருகின்றன.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் சாகுபடி பணிகளை மேற்கொள்ளும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.கரூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு (மிமீட்டரில்): அரவக்குறிச்சி 10.20, க.பரமத்தி 4.80, குளித்தலை 1, மாயனூார் 7, கரூர் 11, அணைப்பாளையம் 5, பஞ்சப்பட்டி 5.60, பாலவிடுதி 9.40, கடவூர் 3, கிருஷ்ணராயபுரம் 5,90, மயிலம்பட்டி 8, சராசரி 5.91, மொத்தம் 70.90. கோடை மழை தொடர்ந்து பெய்து வந்தாலும் மழை அளவு குறைந்து வருகிறது. கடந்த வாரம் 300மி.மீ மழை பெய்தது. இந்த அளவு குறைந்து நேற்று 70மிமீ ஆகிவிட்டது. தோகைமலையில் மழை பதிவாகவில்லை. நேற்று காலை லேசான தூறல் இருந்தது. பின்னர் பிற்பகலில் நன்கு வெயில் அடிக்க துவங்கியது.

**மலர் கண்காட்சி நிறைவு நாளில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்**

ஊட்டி, : மலர் கண்காட்சியின் நிறைவு நாளான நேற்று ஊட்டியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இதனால், பல இடங்களில் நொ ிசல் ஏற்பட்டு ே பாக்குவரத்து பாதிக்கப்பட்டது.கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான 119வது மலர் கண்காட்சி கடந்த 15ம் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் துவங்கியது. தொடர்ந்து மூன்று நாள் நடந்த மலர் கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது. இதனால் நிறைவு தினத்தன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்தனர். கடந்த 15, 16 ஆகிய தேதிகளில் மழை கொட்டி தீர்த்த நிலையில், சுற்றுலா பயணிகள் கடும் அவதியடைந்தனர். இதனால் மலர் கண்காட்சியை கான சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால் கூட்டம் குறைவாக காணப்பட்டது. நிறைவு தினமான நேற்று காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு மழை குறைந்து வெயில் அடித்தது. இதனால் நிறைவு தினத்தன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்தனர். வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் ை பக், கார், வேன்,

டூரிஸ்ட் பஸ் போன்ற வாகனங்களில் வந்தனர். இதனால் ஊட்டி குன்னூர், ஆவின், பிங்கா-ேபோஸ்ட், சோிங்கிராஸ், மைசூர் சாலை, கோத்தகிரி சாலை, கமர்சியல் சாலை மற்றும் பூங்கா சாலைகளில் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. வாகனங்கள் ஊர்ந்தவாறே சென்றதால் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் உள்ளூர் பகுதிகளுக்கு, அரசு பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் தாமதமாக சென்றன.

போக்குவரத்து ெநரிசல்களை சீரமைக்க ஏராளமான போலீசார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**தொடர் கோடை மழை கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

திட்டக்குடி, : திட்டக்குடி பகுதியில் தொடர் மழையால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.திட்டக்குடி பகுதியில் கடந்த மூன்று தினங்களாக மிதமான மழை பொழிந்து வருகிறது. இதனால் திட்டக்குடி பகுதியில் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் மற்றும் குறுவை சாகுபடி செய்த விவசாயிகள்

மகிழ்ச்சியடைந்தனர். தொடந்து நிலத்தடி நீர் மட்டம் உயரவும், தரை கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர் மட்டம் உயர வாய்யப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதேபோல் வேப்பூர், சிறுப்பாக்கம், நாங்கூர் வனப்பகுதியில் மிதமான மழை பொழிந்ததால் வன விலங்களுக்கு போதிய குடிநீர் கிடைக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் வனவிலங்கள் அருகில் உள்ள வயல்வெளிக்கு குடிநீர் தேடி வரும் நிலை இருக்காது. பயிர்களும் சேதமடையாது.மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பொழிவதால் பொதுமக்கள், விடுமுறையில் உள்ள மாணவ, மாணவிகள் கத்திரி வெயில் தாக்கம் குறைந்துள்ளதால் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

**காட்டேரி பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் அதிகரிப்பு**

குன்னூர், ; நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் களை கட்டியுள்ளதால் இங்குள்ள சுற்றுலா தலங்கள் அனைத்திலும் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

தொடர் மழை பெய்து வந்தாலும் கூட இதனை பொருட்படுத்தாமல் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக விடுமுறையை கழித்து வருகின்றனர்.

இந்நிலையில், குன்னூர் அருகேயுள்ள காட்டேரியில் தோட்டக்கலை துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு புதியதாக பூங்கா துவங்கப்பட்டது. மலை ரயில், மலைப்பாதைகளுக்கு இடையே அமைக்கப்பட்டுள்ள இப்பூங்காவிற்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்வதால் இப்பூங்காவை மேலும் பொலிவுப்படுத்தி உள்ளனர்.

கோடை சீசனுக்காக நடவு செய்யப்பட்டுள்ள 25 வகையிலான ஒரு லட்சம் மலர் செடிகள் அனைத்தும் பூத்து குலுங்கி வருகிறது. அலங்கார நடைபாதை காட்சி கோபுரம், நிழல்குடை மற்றும் சிறுவர் பூங்கா மட்டுமல்லாமல் கழிப்பிடம், பார்க்கிங் வசதி ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் சிரமமின்றி பூங்காவிற்கு வந்து செல்கின்றனர்.

கடந்தாண்டு மே மாதம் 1ம் தேதியில் இருந்து நேற்று வரை இப்பூங்காவிற்கு 7 ஆயிரத்து 276 பேர் வந்து சென்றுள்ளனர். இதன்மூலம் ரூ.1 லட்சத்து 23 ஆயிரத்து 220 வருமானம் கிடைத்துள்ளது. இதேபோல் இந்தாண்டும் இதுவரை 9,043 பேர் வந்து சென்றுள்ளனர். இதன்மூலம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்து 650 வருவாய் கிடைத்துள்ளது. கோடை விழாவின் இறுதி நிகழ்ச்சியாக குன்னூர் சிம்ஸ்பூங்காவில் வரும் 23, 24 ஆகிய தேதிகளில் பழக்கண்காட்சி நடக்கிறது. இதனையொட்டி சுற்றுலா பயணிகளின் கவனம் குன்னூருக்கு திரும்பும் என்பதால் வரும் நாட்களிலும் பயணிகள் கூட்டம் அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பயனளிக்கும் பசுந்தாள் உரம்**

பசுந்தாள் உரமானது மண்ணுக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் தரக்கூடியது. மேலும் மண்ணில் வாழும் நுண்ணுயிர்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. அத்துடன் மண்ணின் பவுதீக மற்றும் ரசாயனத் தன்மைகளை மேம்படுத்துகிறது. எனவே, பசுந்தாள் உரமிடுவதால் மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நீர்ப்பிடிப்புத் திறன் மேம்படுகிறது. பசுந்தழைகள் மிக இடுவதால் களைகளின் வளர்ச்சியும் கட்டுப்படுத்தப்படுகிறது.

மண்ணின் கார அமிலத் தன்மை சீர்படுத்தப்படுகிறது. 1 ஏக்கருக்கு பசுந்தாள் உரப் பயிர்களின் விதைகளை 8 முதல் 10 கிலோ வரை ஈரத்தை பயன்படுத்தி விதைப்புச் செய்யவேண்டும். நன்கு வளர்ந்தவுடன் பூப்பூக்கும் முன் பசுந்தாள் உரப்பயிர்களை மடக்கி உழவுச் செய்வதால் மண்வளம் அதிகரித்து தொடர்ந்து சாகுபடி செய்யும் பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்கும். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பசுந்தாள் உரப் பயிர் விதைகளைக் கோடை மழையின் ஈரத்தைனைப் பயன்படுத்தி விதைப்புச் செய்து மண்வளத்தினைப் பாதுகாக்கலாம்.

**கோடை மழையை பயன்படுத்தி சணப்பு விதைகளை விதைத்து மண்** வளத்தை அதிகப்படுத்தலாம்

அன்னவாசல்: தற்போது பெய்து வரும் கோடை மழையைப் பயன்படுத்தி பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு விதைகளை விதைப்பதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்தலாம் என்று வேளாண் துறை பரிந்துரைத்துள்ளது. இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம், குடுமியான்மலை உழவர் பயிற்சி மையத் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூறியதாவது: வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்று மேலடுக்குச் சுழற்சி காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது. இதைப் பயன்படுத்தி கோடை உழவு மேற்கொள்வதோடு பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு விதைகளை

விதைப்பதோடு சம்பா பருவத்துக்கு முன் மடக்கி உழவுச் செய்தால் மண்வளத்தை அதிகரிக்கலாம். அத்துடன் சம்பா நெற்பயிரில் கூடுதல் மகசூல் பெறலாம். பசுந்தாள் உரங்கள் இடுவது நமது முன்னோர் காலத்தில் இருந்து தொன்றுதொட்டு இருந்து வரும் நடைமுறையாகும். பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு, தக்கைப் பூண்டு, கிளைரிசிடியா, சீமை அகத்தி, கொளுஞ்சி போன்ற பயிர்களை விதைப்புச் செய்து அந்நிலத்திலேயே பூப்பூக்கும் முன் மடக்கி உழவுச் செய்வதை பசுந்தாள் உரமிடுதல் என அழைக்கிறோம். பயன்கள் பல தரும் இந்தப் பசுந்தாள் உர விதைகள் தேவைப்படும் விவசாயிகள், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை தொடர்புகொண்டு தேவையான விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தற்போது பெய்து வரும் கோடை மழையைப் பயன்படுத்தி பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு விதைகளை விதைப்பதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்தி அதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என்றனர்.